**Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95**

**Date of Publication : 1st of Every month** — **Date of Posting : 5th & 6th of Every month**

Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14 — Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14

வேணு: 19 — ஜூன் 2014 — கானம் :11



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar




Please subscribe to Madhuramurali



பகவத்கீதை, அமரகோசம், சம்ஸ்கிருத பேச்சு போட்டி பரிசு வழங்குதல்
ஸ்ரீசாந்தீபனி குருகுல வருட பூர்த்தி மே 1, 2014



மே 23, சிங்கப்பூர் நாமத்வாரில் - "மதுரஸ்மரணம் - My Guru As I See HIM" - பாக்யநாதன்ஜி



ஸ்ரீசங்கர ஜெயந்தி - வேதபாராயணம், மதுரபுரி ஆஸ்ரமம் - மே 4



மே 24, சிவன் கோவில் - கெய்லாங், சிங்கப்பூரில்
"மஹாமந்திரமும் மனோபலமும்" பாக்யநாதன்ஜி உரை

**Please subscribe to Madhuramurali**



மே 18 - 25, 2014 - துபாயில் ஸ்ரீமத் பாகவத உபன்யாசம் - ராமானுஜம்ஜி



ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தி - ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில் - பெங்களூர் - மே13, 2014



மே 5 - 14 - ஸ்ரீமத்ராமாயண நவாஹம் - காவேரிப்பாக்கம் - முரளிஜி




புலியூரில் பாகவத மேளா துவக்கம் - மருதாநல்லூர் ஸ்ரீ சத்குரு கோதண்டராம ஸ்வாமிகள், ஸ்ரீ ஸ்வாமிஜி - ஏப்ரல் 24





**Please subscribe to Madhuramurali**






Please subscribe to Madhuramurali

ஸ்ரீ ஹரி :
மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

NO FAME NO SELF INTEREST ONLY GOD NO NAME

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 19 ஜூன் 2014 கானம்: 11

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

**இந்த இதழில் ...**


| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர்-219 | 03 | G.O.D இந்தியா டிரஸ்டு ஆண்டு விழா | 25 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 05 | பாலகர்களுக்கு ஒரு கதை | 27 |
| பாகவத பழம்- ஸ்க2 / 13 | 07 | பிருந்தாவனமும் நந்தகுமாரனும் | 30 |
| தீயவை தீய பயத்தலால் | 12 | மாலே மணிவண்ணா | 32 |
| சாஸ்திரங்கள் | 15 | அப்பாலுக்கு அப்பால் | 34 |
| வீடு தேடி வருவான் விட்டலன் | 21 | | |


நாம் செய்த பாப, புண்யம் பயனாக கடவுள் நமக்கு உடம்பை அளித்து அதையே, "நான்" என்று நினைக்கச் செய்து தண்டிக்கின்றார். ஒருவன் குற்றம் செய்தால் அதற்கு அந்த காலத்தில் கசையடி கொடுப்பார்கள். பக்கத்தில் மருத்துவர் இருப்பார். அவன் பொறுக்க முடியாமல் மூர்ச்சையானால், சிகிச்சை செய்து, அவனுக்கு உணவு கொடுத்து சிறிது காலம் கழித்து, மீண்டும் அடிப்பார்கள். நல்ல போதனை செய்து, மீண்டும் அடிப்பார்கள். நாம் செய்த பாவத்திற்காக, இறைவன் நமக்கு உடம்பை கொடுத்து தண்டிக்கின்றார். போதாவிட்டால் மீண்டும் உடலை கொடுத்து தண்டிக்கின்றார். ஆகையால், நாம் செய்கின்ற பாவங்களே நம் உடல் வந்ததற்கும், மீண்டும் வருவதற்கும் காரணம். ஆகையால், "இனிமேல் பாவம் பண்ணாமல் இருந்தால் உடம்பு வராது. பாவம் பண்ணக்கூடாது" என்ற நினைவு தினமும் இருக்க வேண்டும். - காஞ்சி மஹாஸ்வாமிகள்

Please subscribe to Madhuramurali

# ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம்: ரீதிகௌளை

பல்லவி

கேட்காமலே பல நன்மைகளை அருள் புரிந்தாயே

கண்ணா கண்ணா

சரணங்கள்

(நான்) பலமுறை கேட்டும் அருளாதது ஏனோ

ஞான பக்தி விரக்தி தனை

(கேட்கா...)

காலம் கனிய வேண்டும் என்று காத்திருந்தால் அதற்குள்

காலன் வந்து விட்டால் நான் என் செய்வேன்

(கேட்கா...)

மும்மூர்த்திகளில் முதல்வன் நீயே

முக்தி அளிப்பதிலும் முதல்வன் நீயே

(கேட்கா...)

முக்தர்களும் தொழுதிடும் முகுந்தா

முக்தி வேண்டி உனை நான் சரணடைந்தேனே

(கேட்கா..)

முன் அட்டை: பெங்களூரு ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவிலில் ஸ்ரீஸ்வாமிஜி
பின் அட்டை: பாரதிதாசன் காலனி ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் கோவில் வளாகத்தில் "ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்" ப்ரவசனம் - ஏப்ரல் 25 - 31





Please subscribe to Madhuramurali

# மதுரமான
# மஹனீயர் - 219

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

சில சம்பவங்கள், நம்முடைய மனதில் எழுதி வைத்த சித்திரம் போல் பதிந்து விடுகின்றது. அவைகளை எப்பொழுது நினைத்தாலும், அவைகளை, நாம் நேரில் அனுபவிக்கும்பொழுது எத்தகைய ஆனந்தம் ஏற்பட்டதோ, அத்தகைய ஆனந்தம் அப்படியே ஏற்படும். எப்பொழுதும் காஞ்சி பெரிய பெரியவர்கள் சூரியன் உதயமான பின்னால்தான், அன்றைய தின பிக்ஷை எடுத்து கொள்வார். ஒரு சமயம், இரண்டு மூன்று நாட்கள் வானம் மிகவும் மப்பும் மந்தாரமுமாக இருந்ததால், சூரியன் வரவே இல்லை. பெரியவாளும் பிக்ஷை எடுத்து கொள்ளவே இல்லை. இதை அறிந்த பக்தர்கள் வருந்தினார்கள்.

அவர்கள் வருத்தத்தை அறிந்து, தயாளுவான பெரியவர்கள் வெளியில் வந்து வானத்தை பார்த்தார். அன்றும் நேற்றைய தினம் போலவே, மப்பும் மந்தாரமுமாக இருந்தது. தன்னுடைய கைகளை தட்டி, மேகங்களை சற்றே விலக சொன்னார். மேகம் விலகியது. சூரிய பகவானும் பிரசன்னமானான். ஸ்ரீபெரியவாளும் தரிசனம் செய்து கொண்டார். உடனே முன்பு போலவே, கை தட்டி, மேகங்களுக்கு சைகை செய்ய அவைகள் மூடி கொண்டன. ஸ்ரீபெரியவாளும், அன்று பிக்ஷை செய்ய பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

ஒருநாள், ஸ்ரீபெரியவாளை தரிசனம் செய்ய, வயதான தம்பதிகள் வந்திருந்தனர். அவர்கள் தங்களுக்கு எண்பத்தி ஒன்று வயதாகின்றது என்று தெரிவித்தார்கள். மேலும் தங்களை குழந்தைகள் எல்லாம், சதாபிஷேகம் செய்து கொள்ள சொல்லி வற்புறுத்துகின்றார்கள். ஆனால், அதில் தங்களுக்கு இஷ்டமில்லை என்று தெரிவித்தார்கள்.

ஸ்ரீபெரியவாளும் என்ன காரணம் என்று விசாரித்தார். அதற்கு வந்திருந்தவர், "சதாபிஷேக பத்திரிக்கையில் ஸஹஸ்ர



Please subscribe to Madhuramurali

சந்திர தரிசனம் (ஆயிரம் பிறைகளை பார்த்தவர்) என்று போடுகின்றோம். நான், அப்படி ஒவ்வொரு பக்ஷமும், மூன்றாம் பிறையை தரிசனம் செய்யும் வழக்கம் வைத்து கொள்ளவில்லை. அப்படி நான் தரிசனம் செய்யாதபொழுது, நான் அப்படி போட்டு கொள்வது பொய்யாகாதா? அதனால்தான் வேண்டாம் என்கின்றேன்" என்றார்.

ஸ்ரீபெரியவாள் சிரித்து கொண்டே, "நீயும் ஆயிரம் சந்திரனை தரிசனம் செய்யாததை செய்தேன் என்று போட்டு கொள்ளவும் வேண்டாம். ஆயிரம் பிறைகளை தரிசனம் செய்து விட்டே, சதாபிஷேகம் குழந்தைகள் ஆசைப்படி செய்து கொள்ளலாம்" என்றார். வந்திருந்த தம்பதிகளுக்கு ஒன்றும் புரியவில்லை.

ஸ்ரீபெரியவாள் அவர்களை, நேராக ஏகாம்ரேஸ்வரர் கோவிலுக்கு சென்று, அங்கு பிரகாரத்தில் இருக்கும் ஸஹஸ்ர லிங்கத்தை தரிசனம் செய்ய சொன்னார். ஸஹஸ்ர லிங்கம் என்பது என்னவென்றால், ஒரு பெரிய லிங்கத்திற்குள், ஆயிரம் குட்டி லிங்கங்கள் இருக்கும். அவர்களும், தரிசனம் செய்துவிட்டு மீண்டும் ஸ்ரீபெரியவாளிடம் வந்தார்கள்.

ஸ்ரீபெரியவாள் அவர்களை பார்த்து, "இப்பொழுதாவது சதாபிஷேகம் செய்து கொள்ளலாமா" என்றார். அவர்கள், ஒன்றும் புரியாமல் நின்றனர். ஸ்ரீபெரியவாள், "நீ ஸஹஸ்ர லிங்கத்தை தரிசனம் செய்தாய் அல்லவா? அதில் ஒவ்வொரு லிங்கத்தின் தலையிலும் சந்திரன் உள்ளது அல்லவா? ஆகவே உனக்கு ஸஹஸ்ர சந்திர தரிசனம் ஆகி விட்டது. குழந்தைகள் ஆசைப்படி சதாபிஷேகமும் செய்து கொள்ளலாம். உனக்கும் பொய் சொன்னதாக ஆகாது" என்றார். அவர்களுக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை. அழுது கொண்டே ஸ்ரீபெரியவாளின் சரணத்தில் நமஸ்காரம் செய்து விட்டு பிரியமில்லாமல் சென்றார்கள்.

ஸ்ரீமஹாபெரியவாளின் ஜயந்தியை ஒட்டி, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், ஸ்ரீபெரியவாளை ஸ்மரித்துக் கொண்டு, சொன்ன விஷயங்களை, தங்களுடன் பகிர்ந்து கொண்டேன்.



Please subscribe to Madhuramurali



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

கேள்வி: நான் தினமும் தியானம் செய்து வருகின்றேன். காலை மாலை சேர்த்து, தினமும் இரண்டு மணி நேரம் தியானம் செய்கின்றேன்; மற்ற நேரங்களில் சும்மா இருந்து வருகின்றேன்; வேலையையும் விட்டு விட்டேன்.

பதில்: ஒருநாளில், இரண்டு மணி நேரம் மட்டும் தியானத்தில் ஈடுபடுவதற்காக, வேலையை விட தேவையில்லை. நாம் எதுவும் செய்யாமல் சும்மா இருப்பது நல்லது என்று நினைக்க வேண்டாம். அப்படி இருப்பதால், ஒருவருடைய தமோ குணம் அதிகரிக்கும். இனி வேலைக்கு செல்ல முடியாது என்றால், மற்ற நேரத்தில் நாமம் சொல்வது, நாமம் எழுதுவது, பகவானுடைய பூஜை, பாராயணம், சேவை இவைகளில் ஈடுபட்டு வரவும். இது உங்களிடம் தமோகுணம் அதிகரிக்காமலும் காப்பாற்றும். உங்களுடைய தியானத்திற்கு உதவியாகவும் இருக்கும். அதாவது நீங்கள் தியானத்தில் ஆழ்ந்து ஈடுபட உதவி செய்யும்.

அதேபோல் பக்தி செய்யும்பொழுதும், மிகவும் கவனமாக இருக்க வேண்டும். பக்தி சாத்வீகமாக இருக்க வேண்டும். மனதை ஈடுபடுத்தி, சிறிய அளவில் பூஜை செய்தாலும் போதும். பக்தியில் செய்ய வேண்டிய உபசாரங்கள் விஷயத்தில் நைவேத்யம், வாத்யம், அலங்காரம், பூஜை சாமான்கள் போன்றவைகளை ஆடம்பரமாகவும், பெரிய அளவிலும், செய்ய ஆரம்பித்து விட்டோமானால், இவைகள் அதிகமாகி பக்தி குறைந்து விடும். மிகவும் கவனம் தேவை. வருடத்தில், உத்ஸவ காலங்களில், சில தினங்கள் அப்படி செய்து கொண்டாடலாம்; தவறில்லை.

கேள்வி: ப்ரும்மத்தை கண்களால் பார்க்க முடியாது. நாக்கால் ருசிக்க முடியாது. காதால் கேட்க முடியாது. தொட முடியாது. முகர முடியாது. மொத்தத்தில் ஐம்புலன்களால் உணர முடியாது. அது,



Please subscribe to Madhuramurali

ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்டது என்று சொல்லும்பொழுது அதைப்பற்றி பேசுவதாலோ விசாரிப்பதாலோ என்ன பயன்?

பதில்: வேதம் ஒரு மனிதனால் எழுதப்பட்டது அல்ல. வேதத்தை ஒட்டி வருவதுதான் சாஸ்திரங்கள். அந்த சாஸ்திரங்களின் துணையோடு, ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்டு ஒன்று இருக்க முடியுமா? இருக்கின்றதா? அப்படி இருந்தால் அது என்ன? அதை அடைவதற்கு என்ன வழி? அந்த வழியில் செல்ல என்ன தகுதி? அப்படி அடைந்தால் என்ன லாபம் போன்றவற்றை விசாரிக்கலாமே?

**பரிபூரணமான அறிவு,**
**பரிபூரணமான அன்பு,**
**பரிபூரணமான அடைக்கலம்**
**- இந்த மூன்றில் ஒன்றுதான் பகவானை நம்மால் உணர செய்ய முடியும்.**

**- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி**






Please subscribe to Madhuramurali



# பாகவத பழம்

## ஸ்கந்தம் 2, அத்யாயம் 4

-ஸ்ரீ ஸ்வாமிஜி

13

"ஆத்மவித்தையில் ஸமர்த்தரான சுகர், பரீக்ஷித்திற்கு எதை உபதேசித்தாரோ, தயவு கூர்ந்து அதை எங்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்" என்று பிரார்த்திக்கின்றனர் சௌனகாதி ரிஷிகள்.

ஸூதர் சௌனகாதிகளின் கேள்விகளுக்கு பதில் கூறுகிறார்.

ஸ்ரீ சுகர் பரமாத்ம தத்துவத்தை விளக்கியதைக் கேட்டு, பகவத் கதை மட்டுமே கேட்கத் தகுந்தது என்பதை உணர்ந்து, உத்தரையின் புத்திரனான பரீக்ஷித், ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் நிலையான அசைவற்ற புத்தியை செலுத்தினான். தனது சரீரத்திலும், மனைவியிடத்திலும், புத்திரனிடத்திலும் மேலும் வீடு யானை முதலிய சுகங்களிடத்திலும், பணம், பந்துக்கள் இவைகளிலும் வேரூன்றின "எனது" என்ற அபிமானத்தை பூர்ணமாக விட்டுவிட்டான். ராஜ்யத்திலும், சொத்து சுகங்களிலும் முழுவதுமாக மமதையென்பதையே விட்டுவிட்டான் பரீக்ஷித்.

"கிருஷ்ண கதைதான் கேட்கத்தக்கது, கிருஷ்ண கீர்த்தனம்தான் பண்ணத்தக்கது, கிருஷ்ண ஜபமே செய்யத் தக்கது" என்று நிச்சய புத்தியை அடைந்த, அந்த மஹாமனஸ்வியான பரீக்ஷித், சிரத்தையுடன் வாசுதேவனிடத்தில் ஆத்மபாவத்தை திடமாய் அடைந்தவனாய், நீங்கள் என்னிடம் கேட்கும் ஹரிலீலாம்ருத ரூபமான இவ்விஷயத்தையே ஸ்ரீசுகரிடம் கேட்டார்.

மரணம் இன்னும் ஏழு நாட்களில் ஸம்பவிக்க இருக்கிறது என்பதை அறிந்த பரீக்ஷித், எல்லா கர்மங்களையும் துறந்து பகவத் விஷயத்தைப் பற்றி சுகரிடம் கேட்டார்.



Please subscribe to Madhuramurali

"தோஷமற்றவரே! பிரம்மரிஷியே! எல்லாம் அறிந்தவரான தங்களுடைய வாக்கு மிகச் சிறந்ததே! ஏனெனில், ஸ்ரீஹரியின் கதைகளை நீங்கள் சொல்லும்பொழுதே என்னுடைய அக்ஞானம் நாசம் அடைகின்றது".

நூநம் பகவதோ ப்ரம்ஹன் ஹரேரத்புதகர்மண:

துர்விபாவ்யமிவாபாதி கவிபிஸ்சாபி சேஷ்டிதம் 2:4:8

"பிரம்மா முதலியவர்களால் மனதால் கூட நினைத்துப் பார்க்கமுடியாத இந்த பிரபஞ்சத்தை சர்வேஸ்வரன் எப்படி படைக்கின்றார்? அந்த பரமாத்மா இதை எப்படி ரக்ஷிக்கின்றார்? எப்படி அதை மீண்டும் அழிக்கின்றார்? எந்த எந்த சக்தியைக் கொண்டு இந்த லீலைகளையெல்லாம் செய்கின்றார்? பிரம்மா முதலியவர்களை எப்படி லீலையாக பல காரியங்களை செய்விக்கின்றார்? இதையெல்லாம் நான் அறிய விரும்புகிறேன்" என்று பரீக்ஷித் சுகபிரம்மத்திடம் கேட்கின்றார்.

மேலும் அவர், "ஹே பிரம்மரிஷியே! பிரம்மா, ருத்ராதிகளாலும், ஞானிகளாலும் கூட யூகிக்க முடியாத செயல்களை உடையவர் அந்த ஸ்ரீஹரி. அவர் எப்படி ஒரே ஸமயத்தில் தனியாக இருந்துகொண்டும், பிரம்மா முதலிய அவதாரங்களாகவும் இருந்துகொண்டும் இந்த சிருஷ்டி முதலிய காரியங்களைச் செய்கின்றார்? எனது இந்த சந்தேகத்தை ஸர்வக்ஞரான நீர் நிச்சயம் தெளிவிக்க வேண்டும். ஏனென்றால், தாங்கள் பிரம்ம ஞானி மட்டும் அல்ல, சப்தபிரம்மமான வேதத்திலும் தேர்ச்சி பெற்றவர். ஆகவே, தாங்களே எனது சந்தேகத்திற்குத் தெளிவு கூற முடியும்" என்று பிரார்த்திக்கின்றார்.

இப்படியாக பரீக்ஷித் ராஜாவால் ஸ்ரீஹரியின் குணங்களை எடுத்துக் கூறுமாறு ப்ரார்த்திக்கப்பட்ட சுகர், ஹ்ருஷிகேசனான பகவானை தியானம் செய்துவிட்டு வர்ணிக்க ஆரம்பித்தார்.

ஸ்ரீசுகர் இவ்விடத்தில் பகவானைப் போற்றி செய்யும் இந்த ஸ்துதி சுக ஸ்துதி என்று பிரசித்தம். நாம் பாகவதம் படிக்க ஆரம்பிக்கும் முன் தியான ஸ்லோகங்களைச் சொல்கிறோமல்லவா? அதேபோல், ஸ்ரீசுகர் தான் பாகவதம் கூறத் தொடங்கும் முன், செய்த தியான சுலோகங்களே இந்த சுக



Please subscribe to Madhuramurali

ஸ்துதியாகும். இதில் மொத்தம் பதிமூன்று சுலோகங்கள். அவற்றில் பன்னிரண்டு பகவானைக் குறித்தும், ஒரு சுலோகம் தனது குரு மற்றும் தந்தையான வ்யாஸரைக் குறித்தும் செய்கிறார்.

நம: பரஸ்மை புருஷாய பூயஸே ஸதுத்பவஸ்தான
நிரோதலீலயா
க்ருஹீதசக்தித்ரிதயாய தேஹிநாமந்தர்பவாயநு
பலக்ஷ்யவர்த்மனே 2.4.12

அளவுகடந்த மஹிமையுடையவரும், நிர்குணமாக இருந்தபோதிலும், பிரபஞ்ச சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் எனும் லீலையை புரிவதற்காக மாயையினால் விளையாட்டாக குணங்களை எடுத்துக் கொள்பவரும், எல்லா பிராணிகளின் அந்தர்யாமியானவரும், யாராலும் அறியமுடியாத மார்க்கத்தை உடையவருமான அந்த ஸர்வோத்தமனான பரமாத்மாவுக்கு நமஸ்காரம்.

பகவானுடைய வழிகளை பிரம்ம-ருத்ராதிகளாலும் அறிய முடியாது. அவன் ஸ்வச்சந்தகதியை உடையவன். அவர் என்ன செய்வார், எப்பொழுது எங்கே செல்வார், மேலும் இதுபோல் பகவானைக் குறித்து எந்த ஒரு விஷயத்தையும் யாராலுமே யூகிக்கவோ, புரிந்து கொள்ளவோ முடியாதாம். அந்த பரமாத்மாவுக்கு நமஸ்காரம் என்கிறார் சுகர்.

ஒரு நமஸ்காரம் செய்து திருப்தி அடையாத சுகர் பூயோ நம: என்று மீண்டும் நமஸ்கரிக்கின்றார்.

தன்னை சரணாகதி செய்து பஜனை செய்துவரும் சாதுக்களின் பாபங்களைப் போக்கடிக்கின்றவரும், பக்தி செய்யாத அசத்துக்களிடம் பொதுவாக உதாஸீனமாக இருப்பவரும், அதே சமயத்தில் அவர்கள் ஸாதுக்களை ஹிம்ஸித்தால், அந்த துஷ்டர்களுடைய நாசத்திற்குக் காரணமாயிருப்பவரும், பூர்ண ஸத்ஸ்வரூபியும், ஸன்யாஸ ஆஸ்ரமத்திலோ அல்லது அதற்கு துல்யமான மனோபாவத்தில் நிலைத்திருக்கும் புருஷர்களுக்கு, அவர்கள் விடாமல் தேடிவரும், ஆத்ம ஸ்வரூபத்தை கொடுப்பவருமான அந்த பகவானுக்கு மீண்டும் நமஸ்காரம்.



Please subscribe to Madhuramurali

நமோநமஸ்தே(அ) ஸ்த்வ ருஷபாய ஸாத்வதாம்
விதூரகாஷ்டாயமுஹு: குயோகிநாம்

நிரஸ்தஸாம்யாதி சயேன ராதஸா ஸ்வதாமநி ப்ரம்ஹணி ரம்யதே
நம: 2.4.14

"பக்தர்களை மீண்டும் மீண்டும் காக்கும் உமக்கு நமஸ்காரம்" என்கின்றார். ஒரு பக்தன் எத்தனை முறை பகவானிடம் தனது குறைகளைச் சொன்னாலும், சலித்துக் கொள்ளாமல் பகவான் அவர்களுக்கு உதவுவாராம். இவன் மீண்டும் பிரச்சனையுடன் வந்துவிட்டானே என்று ஒருக்காலும் எண்ணமாட்டானாம். என்னை விட்டால் இவனுக்கு வேறு யார்தான் கதி? என்றே நினைப்பானாம் பகவான். எத்தனை ஆபத்துக்கள் வந்தாலும், மீண்டும் மீண்டும் தன் பக்தர்களைக் காப்பாற்றுவானாம். உண்மையான பக்தர்களுக்கு வரும் ஆபத்துக்களை தானே ஓடிச் சென்று விலக்குவானாம்.

"கெட்ட யோகிகளுக்கு அறியமுடியாத தங்களுக்கு நமஸ்காரம்" என்கிறார் சுகர். நல்லபடியாக பக்தி சிரத்தையுடன் தேடுபவர்களுக்கே தெரியமாட்டேன் என்கிறான்.

அப்படியிருக்க, "பகவான் இருக்கிறானா எங்கே இருக்கிறான், அவன் ஏன் சிருஷ்டியை இப்படியெல்லாம் செய்திருக்கிறான்" என்று அசட்டுத்தனமாக கேள்விகேட்கும் குதர்க்கிகளுக்கு அவன் ஒருக்காலும் அறிய முடியாதவனாம்.

ஒப்புயர்வில்லாத ஸ்வஸ்வரூபமான ஆத்மாவிலேயே ரமிக்கின்ற தங்களுக்கு நமஸ்காரம்; பகவானுக்கு நிகராகவோ, அதிகமாகவோ அழகு, ஐஸ்வர்யம், கல்யாண குணங்கள் என்று எதுவுமே வேறு யாருக்கும் கிடையாது. விஷ்ணுக்கு ஸமமாக வேறு ஒருவரையும் கூறவே முடியாது.

யத்கீர்த்தனம் யத்ஸ்மரணம் யதீக்ஷணம் யத்வந்தனம்
யச்ச்ரவணம் யதர்ஹணம்

லோகஸ்ய ஸத்யோ விதுநோதி கல்மஷம் தஸ்மை ஸுபத்ர
ச்ரவஸே நமோ நம: 2.4.15



Please subscribe to Madhuramurali

எவருடைய கீர்த்தனமும், ஸ்மரணமும், தர்சனமும், நமஸ்காரமும், யார் ஒருவருடைய சரித்திரங்களைக் கேட்பதும், எவரை பூஜை செய்வதும், ஜனங்களுடைய பாபத்தை அந்த கணமே அழிக்கின்றதோ, அந்த மங்களகரமான கீர்த்தியை உடைய பகவானுக்கு மீண்டும் நமஸ்காரம்.

தஸ்மை ஸுபத்ர ச்ரவஸே நமோ நம: - புண்ணியமான, எல்லோரையும் பாவனமாக்குகின்ற கீர்த்தியை உடையவனுக்கு நமஸ்காரம் என்று பலமுறை கூறுகிறார் ஸ்ரீசுகர்.

விவேகிகள் எந்த பகவானுடைய திருவடிகளை சேவிப்பதால் இவ்வுலகம் மற்றும் பரலோகம் இரண்டிலிருந்தும் பற்றுதலை விட்டுவிட்டு, எவ்வித சிரமமுமின்றி பிரம்மஞானத்தை அடைகிறார்களோ, அந்த மங்களகரமான கீர்த்தியையுடைய பகவானுக்கு மீண்டும் நமஸ்காரம். (கனியும்)

மனதில் ஒவ்வொரு எண்ணம் எழும்பொழுதும், அது, சிறிய தீப்பொறி போல் கிளம்பி, மூளைக்கு செல்கின்றது. அதன்மூலம், ஐம்புலன்களின் வழியாக உலக இன்பங்களை அனுபவிக்கின்றது. இது சுகம்.

தூக்கத்தில் படைத்தவனுடைய நியதியின்படி, மனதில் எழும் எண்ணங்கள் மேலே கிளம்பாமல், லயம் ஆகின்றது. அப்பொழுதும் "நான்" என்ற எண்ணம் விழித்து கொண்டே உள்ளது. தூக்கத்தில் தமோகுணத்தில் மனது லயம் ஆவதால், அது மனோலயத்தில் ஏற்படும் சுகம்.

விழித்து கொண்டிருக்கும்பொழுதே, மனதை உதித்த இடத்திலேயே, நிரந்தரமாக பல மணிநேரங்களுக்கு ஒடுக்க முடிந்தால் யோகானந்தம். அல்லது தியான ஆனந்தம்.

மனது முழுவதுமாக அழிந்தால் ஏற்படும் ஆனந்தம் பிரும்மானந்தம்.

- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி



Please subscribe to Madhuramurali

# "தீயவை தீய பயத்தலால் .."

–நல்ல ஹரி

சிலரிடம் எந்தவிதமான தீயபழக்க வழக்கங்களும் இருக்காது. அதே சமயம், அவர்களின் மனதில் சிறிதும் கருணையோ பிறருக்கு உதவி செய்கின்ற எண்ணமோ இருக்காது. மாறாக பிறருடைய வளர்ச்சியைக் கண்டு, பொறாமையும், பிறர் அழிய வேண்டும் என்ற எண்ணங்களும் இருக்கும்.

இப்படி இருப்பவர்களில் சிலர், அவர்கள் சார்ந்துள்ள சமயத்தின் புற கோட்பாடுகளை, தவறாமல் கடைப்பிடிப்பவர்களாகவும் இருப்பார்கள்.

மற்றும் சிலர், சில தீய பழக்க வழக்கங்களுக்கு ஆளாகி இருப்பார்கள். ஆனால் அவர்கள், தங்களால் முடிந்த அளவிற்கு சமூகத்தில் தொண்டு செய்வார்கள். பிறருக்கு ஒரு துன்பம் என்றால், தன்னால் முடிந்த விதத்தில் எல்லாம் உதவுவார்கள். பிறருக்கு கெடுதலை மனதாலும் நினைக்க மாட்டார்கள்.

இவர்கள், தாங்கள் சார்ந்துள்ள சமயத்தின் புறக்கோட்பாடுகளை கடைபிடிக்காதவர்களாக கூட இருக்கலாம்.

ஆனால் சமுதாயம் தீய எண்ணங்களை கொண்டவர்களை காட்டிலும், தீய பழக்கங்களை கொண்டவர்களைத்தான் கெட்டவர்கள் என்று சொல்லி அவர்களிடமிருந்துதான் விலகியிருக்க பார்க்கும்.

ஏன்? நம் எல்லோருக்கும், ஒருவரிடம் இருக்கும் வெளிப்படையான செயல்கள்தான் கண்ணுக்கு தெரிகின்றது. ஒருவருடைய மனதில் உள்ள எண்ணங்கள் தெரியாததே காரணம்.

மேலும், ஒருவருடைய தீயபழக்க வழக்கங்கள் அவருடன் பழகுபவர்களுக்கு அருவருப்பை ஏற்படுத்தச் செய்வதும் ஒரு காரணம்.

ஒருவருடன் பழக நேர்ந்தால், அவரிடம் இருக்கும் நல்லதை நாம் எடுத்து கொள்கின்றோமோ இல்லையோ



Please subscribe to Madhuramurali

அவர்களிடம் உள்ள தீயவற்றைத்தான், நாம் முதலில் பழகிக் கொள்வோம்.

மனதில் உள்ள ஒருவருடைய வாசனை, மற்றவர்களிடம் உடனே பற்றி கொள்ளாது. ஆனால், அதேசமயம் ஒருவருடைய தவறான நடவடிக்கைகள், சேருகின்றவர்களிடம் உடனே பற்றி கொள்ளும். ஆகவேதான், நாம் தீயபழக்கவழக்கங்களுக்கு ஆளானவர்களிடம் இருந்து, விலகி இருக்க பார்க்கின்றோம்.

ஒருவர் என்னிடம், "எனக்கு உடல்நிலை சரியில்லை. நான் ஆரோக்யம் அடைய வேண்டும் என்று எனக்காக பிரார்த்தனை செய்யுங்கள்" என்றார்.

நான் சொன்னேன், "நீங்கள் ஆரோக்யம் அடைய வேண்டும் என்று பிரார்த்தனை செய்கின்றேன். அதோடு மட்டும் அல்லாமல் அப்படி ஆரோக்யம் அடைந்தவுடன் இனிமேலாவது நேரத்தை வீணாக்காமல் நீங்கள் முழுவதுமாக உங்களை இறைவாழ்க்கையில் ஈடுபடுத்தி கொள்வதற்காகவும் பிரார்த்திக்கின்றேன்" என்றேன்.

அதைக்கேட்டு, அவரும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். அதோடு மட்டும் அல்லாமல், "நான் குருவிடம் மந்திர உபதேசம் பெற்று பல வருடங்கள் உருண்டோடி விட்டன. அப்படி ஒரு குருவும் யாருக்கும் கிடைக்க மாட்டார்கள். அப்படி ஒரு உயர்ந்த மந்திரத்தையும், யாருக்கும் ஒருவர் உபதேசிக்க மாட்டார். ஆனால் எனக்கு அவர் கருணையுடன் உபதேசித்தார். அவர் உபதேசம் செய்த நாளில் இருந்து, சில மணிகள் தினமும் விடாமல் ஜபம் செய்திருந்தால் போதும். நான் மஹாத்மாவாக ஆகி இருப்பேன்" என்றார்.

நம் எல்லோர் மனதிலும் இருக்கக்கூடிய ஒரு விஷயம்தான் என்றாலும் அதை அவர் உணர்ந்து உணர்ச்சி பூர்வமாக வெளிப்படுத்தினார்.

- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி



Please subscribe to Madhuramurali

## கோபகுடீரம்

தூத்துக்குடி நாமத்வார் சார்பாக, ஏப்ரல் **28 - 30**தேதிகளிலும், மதுரை நாமத்வார் சார்பாக, ஏப்ரல் **21 - 23**தேதிகளிலும், மார்ச் **21-24** தேதிகளில் சென்னையிலும், குழந்தைகளுக்கான கோபகுடீரம் கேம்ப் சிறப்பாக நடைபெற்றது. இதிஹாசம், வேதம், அறிவியல், தலைமைப்பண்புகளை வளர்ப்பது, ஒழுக்கம், மகான்களின் துதிகள், சமஸ்கிருதம், பாரம்பரிய கலை, நமது கட்டிடக்கலையின் மேன்மை, இயற்கை வள பசுமை காப்பது, கண் பராமரிப்பு, மெழுகுவர்த்தி செய்வது, சமையற்கலை, கரகாட்டம், பூ அலங்காரம், கோலங்கள், வர்ணம் தீட்டுதல், பிரிண்டிங் செய்வது, சங்கீதம், மனோபலம் மற்றும் நாமயோகம் ஆகியன குறித்து பல கற்றறிந்தவர்களும் பங்கேற்க சிறப்பாக போதிக்கப்பட்டது. தூத்துக்குடி நாமத்வாரில் பூர்த்திநாளன்று திரு.பாலாஜிராமச்சந்திரன் குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கினார். மதுரை நாமத்வாரிலும் சிறப்பு விருந்தினர்களால் குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப் பெற்றது.

rb rajmani builders
launches its new project
"rajmani's mathura"
at kolapakkam (near Porur)
well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices
ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com
ADVT
website: www.rajmanibuilders.com



Please subscribe to Madhuramurali

# சாஸ்திரங்கள்

- அச்சு

மருத்துவ துறையினர் பல காலம் ஆராய்ச்சி செய்து, மனிதனுடைய உடலிலுள்ள அங்கங்களையும் அதனுடைய செயல்பாடு மற்றும் அளவுகளையும் தெளிவுபடுத்தி உள்ளார்கள். உதாரணமாக உடலில் இதயம் உள்ளது. அதனுடைய துடிப்பின் அளவு இவ்வளவு இருக்க வேண்டும், இரத்தத்தின் அழுத்தம் இந்த அளவு இருக்க வேண்டும் போன்றவைகளே அது.

அது மட்டும் அல்லாமல் நமக்கு ஏற்படக்கூடிய வியாதிகள், அதனுடைய காரணங்கள், அதற்கான தீர்வுகளையும் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

நம்முடைய மஹரிஷிகளோ, இவைகளோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் உடலில் ஐந்து கோசங்கள் உள்ளன. ஐந்து ப்ராணன்கள் உள்ளன. பதினாறு ஆவரணங்கள் உள்ளன. ஆறு சக்கரங்கள் உள்ளன. சுழுமுனையில் ஜோதி உள்ளது. தலையில் சுரப்பிகள் உள்ளன. குண்டலினி என்ற நாடி உள்ளது. இடகலை, பிங்கலை நாடிகள் உள்ளன.

மேலும் எண்ணங்கள் எங்கிருந்து உற்பத்தி ஆகின்றன. ஒவ்வொருவருக்கும் வேறு வேறு விதமான எண்ணங்கள் வருவதற்கு காரணம் என்ன? மனதில் தீய எண்ணங்கள் வருவதும் அறிவு தீயவைகளை திட்டமிடுவதும் வியாதிதானே? அதற்கு காரணம் என்ன? அதற்கு நிவர்த்தி என்ன?

நிரந்தரமான ஆனந்தத்தை அடைய முடியுமா? சரீரமே இல்லாமலும் ஒருவன் வாழ முடியுமா? போன்றவற்றை தெய்வ அருளினால் உணர்ந்து வெளியிட்டதுதான் சாஸ்திரங்கள்.

இந்த சாஸ்திரங்களில் சொல்லி உள்ள விஷயங்களை, அனுபவத்தில் கண்டவர்கள், இன்றும் உள்ளார்கள் என்பதே இதற்கு போதிய ப்ரமாணம் ஆகும்.



Please subscribe to Madhuramurali

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**



Please subscribe to Madhuramurali

# வீடு தேடி வருவான் விட்டலன் – 4

தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

---

புண்டலீகனின் மனம் ப்ரவசனம் கேட்டு விட்டு வந்த பின் வெகுவாக மாறி இருந்தது. அவன் கதையை பற்றி ஸ்ரீஸ்வாமிஜி சொல்லிக்கொண்டே வந்தார்கள்.

அவன் புராண கதை கேட்டு திரும்பி வந்ததிலிருந்தே, அவன் ஒரு மாதிரி சிந்தனையில் ஆழ்ந்திருப்பதை அவன் மனைவி கவனித்து இருந்தாள். அவனை பார்த்து அவள் பேசலானாள்.

மனைவி : ஏன் ஒரு மாதிரி இருக்கிறீர்கள்? எங்கு போய் வந்தீர்கள்?

புண்டலீகன் : ஒன்றுமில்லை. கதைக்கு போயிருந்தேன்.

மனைவி : கதைக்கு போனது போல் தெரியவில்லையே.

கதைக்கு போய்விட்டு வந்தால் மனது உற்சாகமாக இருக்குமே?

புண்டலீகன் : கதை நன்றாகத்தான் இருந்தது. பௌராணிகர் இன்று கங்கைக்கு போய் ஸ்நானம் செய்வது என்பதை வாழ்நாளில் ஒருமுறையாவது அவசியம் செய்ய வேண்டும் என்றார்.

மனைவி : அதனால் என்ன? இது நமக்கு தெரியாத விஷயமா என்ன? நாம் இதை புதிதாக ஒன்றும் கேட்கவில்லையே!

புண்டலீகன் : அப்படி இல்லை. பௌராணிகர் பல விஷயங்களை அழகாக சொன்னார். அதை கேட்டதிலிருந்து கங்கா ஸ்நானம் செய்ய வேண்டும் என்று ஆசை எனக்கு வந்து கொண்டே இருக்கிறது. உன்னால் ஒரு உதவி செய்ய முடியுமா?

மனைவி : என்ன?

புண்டலீகன் : வயதான தாய், தந்தையரையும், குழந்தையையும் உன்னால் பார்த்துக் கொள்ள முடியுமா? நான் போய் கங்கா ஸ்நானம் செய்து விட்டு வருகிறேன்.

இப்படி சொல்லி வந்த ஸ்ரீஸ்வாமிஜி அக்காலத்தில் கங்கைக்கு செல்வதெல்லாம் அவ்வளவு எளிதல்ல என்று சொல்லிக்கொண்டே வந்தார்கள். ஆவலின் மிகுதியால் புண்டலீகன் இப்படி பேசுகிறான். அக்காலத்தில் பேருந்து வசதிகள்



Please subscribe to Madhuramurali

கிடையாது. நதிகளின் மேல் பாலங்கள் கிடையாது. நடந்துதான் போக வேண்டும். நதிகளில் வெள்ளம் வந்து விட்டால், வெள்ளம் வடியும்வரை அங்கேயே தங்க வேண்டும். காசிக்கு போய் வர எவ்வளவு நாள் ஆகும் என்று சொல்ல முடியாது. ஒரு ஜன்மா கூட ஆகலாம். அதனால்தான் "செய்ய முடியாத காசி யாத்திரை செய்த ஒருத்தர்" என்ற அர்த்தத்தில், காசி யாத்திரை செய்து விட்டு வந்தவர் என்று தெரிந்தால் ஒருவரை இன்றும் வணங்குகிறோம்.

இப்படி காசிக்கு செல்வது அக்காலத்தில் எவ்வளவு கடினமாக இருந்தது என்பதை சொல்லி விட்டு, காசியாத்திரை எப்படி செய்ய வேண்டும் என்று சொல்லி கொண்டு வந்தார்கள்.

அந்த காலத்தில் காசி யாத்திரை போய் வருவது அந்த அளவு கடினம். இராமேஸ்வரத்திலுள்ள உகந்த கணபதி என்ற பெயருடைய பிள்ளையாரை சேவித்து விட்டு, நவபாஷாண தீர்த்தத்தில் நீராட வேண்டும். திருப்புல்லாணியில் உள்ள கடலடைத்த பெருமாள் எனும் ஜகன்னாத பெருமாளை தரிசனம் செய்ய வேண்டும். அருகில் தர்ப்பசயனத்தில் இருக்கும் ராமரை பார்க்க வேண்டும். பக்கத்தில் இன்றும் சிரஞ்சீவியாக அனுமார் வாழும் கந்தமாதன பர்வதத்தை சேவித்து, ராமேஸ்வர சேதுவிலும், கோவிலில் உள்ள எல்லா புண்ய தீர்த்தங்களிலும் நீராட வேண்டும். அதன் பின்னர் ராமநாத ஸ்வாமியை தரிசனம் செய்ய வேண்டும். பின்னர் அங்கிருந்து கொஞ்சம் மண் எடுத்துக் கொள்ள வேண்டும். நேரே கங்கா, யமுனா, சரஸ்வதி என்ற புண்ய நதிகள் சங்கமமாகும் திரிவேணி சங்கமமான அலஹாபாத்தில் ஸ்நானம் செய்ய வேண்டும். வாரா, அஸி என்ற நதிகளுக்கு உட்பட்ட இடத்திற்கு பெயர் வாரணாசி. அங்கு இரண்டு நதிகளும் ஓடுகின்றன. அங்கு காசியில் கங்கையில் ஸ்நானம் செய்ய வேண்டும். அங்கு விசாலாக்ஷி, விஸ்வநாதர், துண்டி கணபதி, காலபைரவர், சோளியம்மன், வியாச காசி, இவற்றையெல்லாம் தரிசனம் செய்தால்தான் காசி யாத்திரையே பூர்த்தி ஆகும். பித்ரு தர்ப்பணம் செய்ய ஆசைப்படுபவர்கள் அங்கிருந்து கயா சென்று பிண்ட தர்ப்பணம் செய்ய வேண்டும். ராமேஸ்வரத்திலிருந்து கொண்டு வந்த மண்ணை அலஹாபாத்தில் கரைத்து விட்டு, அங்கிருந்து தீர்த்தம் எடுத்துக் கொண்டு வந்து, மறுபடி



Please subscribe to Madhuramurali

ராமேஸ்வர ராமநாத ஸ்வாமிக்கு, பதினோரு முறை ருத்ரம் சொல்லி அபிஷேகம் செய்ய வேண்டும். இப்படி செய்தால் தான் ஒரு காசியாத்திரை பூர்த்தியாகிறது. இதுதான் காசி யாத்திரை விதி. இப்படி செய்தால்தான் காசி யாத்திரை பூர்த்தி ஆகும் என்று சொன்ன ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், சும்மா காசிக்கு சென்று வருவது எல்லாம் யாத்திரை ஆகாது என்றார்கள்.

மேற்கொண்டு புண்டலீகனின் கதையை தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தார் ஸ்ரீஸ்வாமிஜி. காசி யாத்திரை கடினம் என்பதை அறிந்திருந்த புண்டலீகன் மனைவி, "காசி யாத்திரை எல்லாம் விளையாட்டா என்ன? அது சாத்தியமில்லை" என்றாள். புண்டலீகனோ, "எனக்கென்னவோ போக வேண்டுமென்று ஆசை தொடர்ந்து இருக்கிறது" என்றான். மனைவி, "சரி, உங்கள் அப்பா, அம்மா அனுமதி கொடுத்தால் நீங்கள் போய் வாருங்கள்" என்றாள்.

(தொடரும்)

## சிங்கப்பூர் சத்சங்கங்கள்

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன் சிங்கப்பூர் மற்றும் மலேசிய நாடுகளுக்கு நாமப்பணிகளுக்காக சென்றுள்ள டாக்டர்.பாக்யநாதன்ஜி மே23 அன்று சிங்கப்பூர் நாமத்வாரில் முதலில் ஸ்ரீஸ்வாமிஜியின் புனித சரிதத்தை "மதுரஸ்மரணம் - **My Guru as I See HIM**" அழகாக பேசினார்.

மே24 - சிங்கப்பூர் கேய்லாங்க் சிவன் கோவிலில் "மஹாமந்திரமும் மனோபலமும்" என்ற தலைப்பில் பேசி, கூட்டு ப்ரார்த்தனையையும் அவர் நிகழ்த்தினார். சிங்கப்பூர் நாமத்வார் அன்பர்கள் ஏற்பாடுகளை செவ்வனே செய்திருந்த இந்நிகழ்ச்சிக்கு, அரங்கமே நிரம்பி வழியும் அளவிற்கு, சிங்கப்பூரின் பல பகுதிகளிலிருந்து, அன்பர்கள் வந்திருந்தனர். பாக்யாஜி எடுத்து பேசிய ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் உபதேசங்களை கேட்டு, அன்பர்கள் மிக்க மகிழ்ச்சி உற்றனர்.

முன்னதாக பாக்யநாதன்ஜி, டாம்பைன்ஸ் கம்யூனிட்டி சென்டரில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் மதுரகீதங்களுக்கு நாட்டியம் ஆடிய, கோபகுடீர குழந்தைகளுக்கு, பரிசுகளும் வழங்கினார். மறுநாள், பல இல்ல சத்சங்கங்களில் அவர் கலந்து கொண்டார்.



**Please subscribe to Madhuramurali**

## சனாதனப்புதிர் பகுதி 62 - கேள்விகள் - ஆத்ரேயன்

1. ஆலஸ்தம்ப கல்ப சூத்ரங்களை இயற்றியவர் யார்? அதில் எத்தனை பகுதிகள் உள்ளன?
2. அபராஜித ஸ்தோத்திரம் எங்கு காணப்படுகிறது?
3. ஆனந்தாஸ்ரம முத்ராணலயா - இது எதை குறிக்கிறது?
4. வால்மீகி ராமாயணத்தில் கருடன் எங்கே வருகிறார்?
5. ஸ்ரீகுருக்ரந்த சாஹிப் நூலில் யாருடைய துதிகள் தொகுக்கப்பட்டு உள்ளன?
6. ப்ரத்அமிக்ஞான தர்சனம் என்னும் காஷ்மீரில் சிவ வழிபாடு யாரால் பிரசித்தி அடைந்தது? அவர் எழுதிய நூல்கள் எவை?
7. ஆசாரம், சதாசாரம், நன்னடத்தை இவை மஹாபாரத்தில் எங்கு காணப்படுகிறது?
8. அஜாதசத்ரு யார்? இவரை பற்றிய விவரங்கள் எங்கே இருக்கிறது?
9. பாஹ்லீகம் என்ற தேசம் இதிஹாசங்களில் காணப்படுகிறது. இது எங்கே இருக்கிறது?
10. பகவந்த பாஸ்கரம் - இந்த நூல் யாரால் இயற்றப்பட்டது?

### விடைகள்

1. ஆபஸ்தம்பர் - ஸ்ரௌத சூத்திரங்கள்; மந்திரவாதா. க்ருஹ்ய சூத்ரங்கள், தர்ம சூத்திரம், சுலப சூத்ரங்கள் - இன்றும் அநேகம்.
2. தேவீ மஹாத்மியம் - 5.8.82 இந்திரன் முதலிய தேவர்கள் துர்க்கையை ஸ்துதிக்கும் ஸ்துதி.
3. 1888இல் எம்.சி.ஆப்தே அவர்கள் பூனாவில் தொடங்கிய பிரசுரம். இதுவரை 188 இந்து சம்பந்தமான நூல்களை பிரசுரித்திருக்கிறார்கள். 8000 ஓலைச்சுவடிகள்; கையெழுத்து ப்ரதிகள் இவர்களிடம் உள்ளது. சி.டி. வடிவத்திலும் தயாரிக்கின்றனர்.
4. யுத்தகாண்டம் - இந்திரஜித் நாகாஸ்திரத்தை பிரயோகித்தபொழுது ராம, லக்ஷ்மணர் உட்பட அனைவரும் மூர்ச்சை அடைகின்றனர். அப்பொழுது கருடன் வருகையால் பாம்புகள் மறைகின்றன.
5. நானக் 974, அங்கத் 62, அமர்தாஸ் 907, அர்ஜுன்தேவ் 2218, தேஜ்பஹதூர் 115, நாமதேவர் 61, ரைதாஸ் 39, கபீர்தாஸ் 226, மொத்தம் 6000ஸ்துதிகள்.
6. அபிநவ குப்தர் - ஈஸ்வர ப்ரத்யபிக்ஞான விமர்சனி என்ற நூல்; இவர் காஷ்மீரில் வசித்தவர்.
7. அனுசாஸன பர்வா - 161.172 - மஹாபாரதம்; குலாசாரம், தேசாசாரம், நித்யகர்மானுஷ்டானங்கள் இப்படி பல.
8. காசி அரசன் - மஹா ஞானி; ரிஷி த்ருப்த பாலாஜி என்பவருக்கு மெய்ஞானத்தை கற்பித்தவர்; ப்ரஹதாரண்யக உபநிஷத் 2.1; கௌசிதாகி ப்ராஹ்மண உபநிஷத் 4.1.
9. ஆப்கானிஸ்தானுக்கு வடக்கு; ஈரானுக்கு கிழக்கு; இப்பொழுது பேக்ட்ரியா என்றழைக்கப்படுகிறது. பீஷ்மபர்வா 9; கர்ண பர்வா - 44; (மஹாபாரதம் - அயோத்திக்கும் கேகய நகரத்திற்கும் இடைப்பட்ட தேசம் - அயோத்யா காண்டம் 68.18);
10. நீலகண்டர்; இந்த நூல் 12 பகுதிகள் (மயூகங்கள்) அடங்கியது; சம்ஸ்காரம், காலம், ஆசாரம், சிராத்தம், நீதி, வ்யவஹாரம், உத்ஸர்கம், ப்ரதிஷ்டை, ப்ராயச்சித்தம், சுத்தி, சாந்தி.



Please subscribe to Madhuramurali

# G.O.D. *இந்தியா டிரஸ்டின்*
# *4வது ஆண்டு விழா*

G.O.D. இந்தியா டிரஸ்டின் 4வது ஆண்டு விழா, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன், குடியாத்தம் KMG கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மே 3, 4 தேதிகளில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. விழா ஏற்பாடுகளை குடியாத்தம் திரு.மாணிக்கம், அவரின் குடும்ப உறுப்பினர்கள், மிக அழகாக செய்திருந்தனர். KMG கலை மற்றும் அறிவியல் கல்லூரி செகரெட்டரி திரு.ராஜேந்திரன் மற்றும் கல்லூரி நிர்வாகிகள் விழா நன்கு நடைபெற மிகவும் ஒத்துழைப்பு தந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. குடியாத்தம் வழக்கறிஞர் திரு.பூபதி விழாவை துவக்கி வைத்து பேசினார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுடனான அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டார். விழாவிற்காக குடியாத்தம் திரு.தமிழ்த்திருமால் மற்றும் பல சத்சங்க அன்பர்கள் அரும்பணியாற்றினர்.

இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் தமிழக அண்டை மாநிலங்களிலிருந்தும் பெருவாரியாக சுமார் 200 நாமத்வார் மற்றும் காட் சத்சங்க ஒருங்கிணைப்பாளர்கள், சத்சங்க அன்பர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் வந்து உற்சாகமாக கலந்து கொண்டனர். முதலில் அறக்கட்டளை ஸ்தாபகர் திரு.சத்தியநாராயணன் டிரஸ்டின் எதிர்கால லட்சியம் குறித்து பேசி வரவேற்புரை நவின்றார். திரு.பாலாஜி ராமச்சந்திரன் ஸ்தாபனத்தின் கடந்த வருட செயல்பாடுகளை பற்றி பேசினார். டாக்டர் ஆ.பாக்கியநாதன், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் வழிகாட்டுதலின்படி நடைபெற்று வரும் அனைத்து ஸ்தாபனங்களின் செயல்பாடுகள் மற்றும் திட்டம் குறித்து மிக அழகாக உரையாற்றினார். ஸ்ரீ கல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் கோயில் நிகழ்ச்சிகள் மற்றும் பிரார்த்தனையின் மகிமை குறித்து திரு.பம்மல் பாலாஜி உரையாற்றினார். வெளிநாடுகளில் நாமப்பணி எப்படி நடந்து கொண்டிருக்கின்றது என்பது குறித்தும், நாமப்பணிகளை எப்படி செய்ய வேண்டும் என்றும், காட் சத்சங்கங்களின் சமுதாயப்பணிகள் குறித்தும் ராமானுஜம்ஜி பேசினார். முரளிஜி நாமத்வார் ஒருங்கிணைப்பாளர்களையும் நாமத்வார்களையும் அறிமுகம் செய்து வைத்து பேசினார். பூர்ணிமாஜி ஒரு விறுவிறுப்பான வினாடி வினா நிகழ்ச்சியை நிகழ்த்தினார். திரு.வெங்கடேஸ்வரன் குருமூர்த்தி நாமத்வார் மற்றும் அதை வழி நடத்துபவர்களுக்கான வழிமுறைகள் மற்றும்



Please subscribe to Madhuramurali

செயல்பாட்டு முறைகளை எடுத்துக் கூறினார். மாஸ்டர் விக்னேஷ், மாஸ்டர் சனத், மாஸ்டர் ஸ்ரீராம் ஆகியோர் விழா நன்கு நடைபெற உதவி புரிந்தனர். சுதாதியாகராஜன்ஜி மற்றும் ஜனனி வாசுதேவன்ஜி ஆகியோர், கோபகுடீரம் மற்றும் சம்ஸ்க்ருதியின் செயல்பாடுகள் குறித்து பேசினர். நாமத்வார் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கேந்திர அன்பர்கள் தங்கள் கடந்த கால செயல்பாடுகள் மற்றும் வருங்கால திட்ட அறிக்கையினை சமர்ப்பித்தனர். தங்கள் பகுதியில் நடந்த பணிகள் குறித்த அறிக்கை மற்றும் புகைப்பட தொகுப்பினை பகிர்ந்து கொண்டனர். மதுரமுரளி சந்தா, நமது வெளியீடுகளின் விற்பனை ஆகியவற்றில் முதன்மைக்கான சுழற்கோப்பை, பெரியகுளம் திரு.கிருஷ்ணகுமாருக்கு வழங்கப்பட்டது. குடியாத்தம் காட் சத்சங்க குழந்தைகளின் கோபகுடீர கலைநிகழ்ச்சிகளும், சிறுவன் லோகேஷின் பக்தமீரா சொற்பொழிவும், அனைவரையும் மிகவும் கவர்ந்தது. மிகவும் விமரிசையாக சுவையான பிரசாதம் வந்திருந்த அனைவருக்கும் வழங்கப்பட்டது.

நாமப்பணியில் ஈடுபட்டு வரும் இந்த காட் சத்சங்க அன்பர்களனைவரும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் விசேஷ கடாக்ஷம் பெற்றோர் என்பதை சொல்லவும் வேண்டுமோ!


**Dr. Shriraam Mahadevan**

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

**ENDOCRINE & SPECIALITY CLINIC**

**New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,**
**R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.**
**(Next to Krishnamachari Yogamandiram)**
**Tel: 2495 0090Mob: 94458 80090**
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com





Please subscribe to Madhuramurali

## பாலகர்களுக்கு ஒரு கதை



# அன்பின் அடையாளம்!

கழுகொன்று ஒரு மலை உச்சியின் பாறைகளின் இடுக்கில், ஒரு கூடு கட்டி குஞ்சுகளோடு வசித்து வந்தது. அவற்றை அது ஆசையுடன் பார்த்து கொண்டிருந்தது. குஞ்சு பறவைகள் தத்தி தத்தி செல்லும் பாங்கை ரசிக்கும் அந்த தாய் கழுகு. ஒருநாள் கண்களில் ஒரு திடமான பார்வையுடன் கூட்டிற்கு விர்ரென்று பறந்து வந்தது தாய் கழுகு. அதற்கு ஒரு கடமை பாக்கி இருந்தது. அதை செய்யத்தான் அது வந்திருந்தது. மலை உச்சியிலிருந்து பார்த்தால் ஒரே அதல பாதாளம். பிடித்து கொள்ள கூட ஒன்றும் கிடையாது. அப்படி இருந்தும் பறந்து வந்த அந்த தாய் கழுகு, தன் புதிய குஞ்சை, கூட்டின் விளிம்பிற்கு தள்ள ஆரம்பித்தது.

அந்த குஞ்சோ, தன் தாயை பார்த்து பார்த்து, நகர மறுத்துக்கொண்டே இருந்தது. அதன் கண்களில் மிரட்சியும் பயமும் தெரிந்தன. அன்பான அம்மா தன்னை இப்படி ஆபத்தில் தள்ளுகிறாளே என நினைத்து பயந்தது. குஞ்சு அம்மாவை எதிர்த்து நகர மறுத்து கொண்டே இருந்தது. கொஞ்சம் கோபமும் பட்டது!

தாய் கழுகிற்கு ஒரே வருத்தம். ஏன் குஞ்சு தன்னை எதிர்க்கிறது? வளர்ந்த குஞ்சானது, இறக்கைகள் இருப்பதை அறியாமல், தத்தி தத்தி நகர்ந்தவாறு இருக்கிறதே! அது உயர பறக்கும் கழுகு என்பதை புரியாமல் இருக்கிறதே! அதற்கு இறக்கை இருக்கிறது என்பதையும், பறப்பது அதன் இயல்பு என்பதையும் கற்று கொடுக்க வேண்டுமே என்றும் நினைத்தது.

மெல்ல மெல்ல, எவ்வளவு தள்ளி பார்த்தும் குஞ்சு நகர மறுத்த பொழுது, தாயானது பின் வருமாறு நினைத்தது.

"பிடிக்கிறதோ இல்லையோ, கூட்டிலிருந்து இதை தள்ளி விடுவோம். எப்படியும் தனக்கு இறக்கை இருக்கிறது என்பதை தெரிந்து கொள்ளும். அப்பொழுதுதான் தான் கழுகு என்பதை அறியும். பறக்க பறக்க, அது பலம் கொண்ட கழுகாக மாறி விடும்" என்று நினைத்து தள்ளி விட்டது.



Please subscribe to Madhuramurali

கழுகு குஞ்சோ, பயத்தின் எல்லைக்கு சென்றது. ஆனாலும், தள்ளி விட்டபொழுது, இயல்பாய் அதன் இறக்கைகள் விரிந்தன. அதற்கே ஆச்சரியமாய் அது சுதந்திரமாய் பறக்க ஆரம்பித்தது.

ஒரு ஆச்சரியம்! பறந்து தன் முழுபலத்தை அறிவதற்கு முதல் தடையாய் இருந்தது, கீழே விழுந்து விடுவோமோ எனும் அதன் பயம்தான்! சிலமுறை கழுகு குஞ்சிற்கும் சுதந்திரமாக பறக்க ஒரு "தள்ளல்" தேவைப்படுகிறது.

பயத்தை மீறி அதற்கு ஒரு வாய்ப்பை தாய் கொடுத்ததுதான், இப்படி அது தன் பலத்தை அறிய காரணம். குஞ்சானது பறக்க வேண்டுமே எனும் தாய் கழுகின் அன்பின் அடையாளம்தானே, இப்படி செய்ய தூண்டுகிறது.

இப்படித்தான் ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு இயல்பான திறமை இருக்கும். அவரது தனித்தன்மையை உணர வைக்க, அவரை கொஞ்சம் தூண்டி விடுவது சில சமயம் அவசியமும் கூட!

உள்ளே மறைந்து இருக்கும் சக்தியை வெளிப்படுத்த அன்பரின் பயத்தையும் பொருட்படுத்தாது, செய்யும் ஒரு தள்ளலும் அன்பின் உண்மையான அடையாளமன்றோ! ஒரு குரு அதைத்தானே செய்வார்!

## மத்திய கிழக்காசிய நாடுகளில் சத்சங்கங்கள்

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாசிகளுடன் மத்தியகிழக்காசிய நாடுகளில் பல சத்சங்கங்களை ராமானுஜம்ஜி நிகழ்த்தினார். ராமானுஜம்ஜி முன்னிலையில், மஸ்கட் சத்சங்க கோபகுடீர ஆன்மீக பல்சுவை நிகழ்ச்சி, க்ருஷ்ணன் கோவிலில் விமரிசையாக நடைபெற்றது. அபுதாபியில் மே 13 முதல் 17வரை பகவத்கீதை குறித்தும் 18முதல் 25வரை துபாயில் ஸ்ரீமத்பாகவத உபன்யாசமும் ராமானுஜம்ஜி செய்தார். துபாயில் விமரிசையாக ப்ரபோதனம், பாகவத துதி, பாராயணம், ஆரத்தி, டோலோத்ஸவத்துடன் அவரது உபன்யாசம் இடம்பெற்று இருந்தது. திரளாக அன்பர்கள் வந்திருந்து திருவருளும் குருவருளும் பெற்று சென்றனர்.



Please subscribe to Madhuramurali

**ஏப்ரல் 25 - 31** சென்னை பாரதிதாசன் காலனி ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் கோவிலில் "ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்" என்ற தலைப்பில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ஸ்ரீக்ருஷ்ண லீலைகளை ப்ரவசனம் செய்தருளினார்கள். தினமும் ஏராளமான அன்பர்கள் வந்து செவிமடுத்து கேட்டு இன்புற்றார்கள். ஸ்ரீசர்மா சாஸ்திரிகள் எழுதிய சனாதன தர்மத்தின் பெருமைகளை எடுத்துச் சொல்லும் THE GREAT HINDU TRADITION எனும் புத்தகத்தின் ஐந்தாவது பதிப்பை வெளியிட்டார்கள்.

**மே 1 -** ஸ்ரீசாந்தீபனி குருகுலத்தின் வருட பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்ற பகவத்கீதை, அமரகோசம், சமஸ்கிருத பேச்சு போட்டியில் வெற்றி பெற்ற வித்யார்த்திகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜி பரிசுகள் வழங்கினார்கள். பாடசாலை பிரின்சிபால் ப்ரும்மஸ்ரீ பாலாஜி, ஸ்ரீசாந்தீபனி குருகுலம் குறித்து உரையாற்றினார்.

**(மே 11-19) மே13** பெங்களூரு ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் கோவில் வளாகத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி கொண்டாடப்பெற்றது. வேத விற்பன்னர்களால் ஜபமும், **13**ஆம் தேதி மாலை விசேஷ பூஜையும் நடைபெற்று, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ப்ரவசனம் செய்தருளினார்கள். **14**ஆம் தேதி சித்ராபௌர்ணமியை ஒட்டி, விசேஷ திருமஞ்சனம் வானர ராஜ சிம்ம உற்சவருக்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்களால் செய்யப்பட்டது. **15**ஆம் தேதி ஸ்ரீமஹாஸ்வாமிகளின் ஜெயந்தி அன்று காலை ஹோமங்கள் நடைபெற்று, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ப்ரவசனம் செய்தருளினார்கள். **16**ஆம் தேதி ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் அனுமானுக்கு ஊஞ்சல் உற்ஸவம் நடைபெற்றது. **17**ஆம் தேதி அன்று மூலவருக்கு மூல நக்ஷத்திரத்தன்று சிறப்பு திருமஞ்சனமும் ஸ்ரீஸ்வாமிஜி செய்தார்கள். வழக்கம்போல் மாலை ஸ்ரீஹனுமான் புறப்பாடு கண்டருளினார்.

**ஏப்ரல் 24 -29** புலியூர் பாண்டுரங்கன் பஜனை மடத்தில் நடைபெற்ற ஸ்ரீபாகவத மேளா மகோத்ஸவத்தில், மருதாநல்லூர் ஸ்ரீசத்குரு கோதண்டராம சுவாமிகள் முன்னிலையில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், நாமகீர்த்தனத்திற்கு பெருமை சேர்த்த பல மகான்களின் திருவுருவப்படங்களை திறந்து வைத்து, அனுக்ரஹ பாஷனம் அருளி, ஸ்ரீபாகவத மேளாவை துவக்கி வைத்தார்கள்.

**மே 5 -14** காவேரிப்பாக்கம் அழகிய ராமர் கோவிலில் முரளிஜி ராமாயண உபன்யாசம் செய்தார். திரளான அன்பர்கள் வந்து திருவருள் பெற்று சென்றனர்.



Please subscribe to Madhuramurali

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

## ஸ்ரீபக்த கோகில்ஜி -6

ப்ருந்தாவனத்தில் கோகில்ஜி ஸ்ரீஸீதாராம யுகளம் விளையாடவும் ஓய்வெடுக்கவும் ‘ஸ்ரீஸுகநிவாஸ்’ எனும் ஒரு குடிலும் ஒரு சிறிய பூந்தோட்டமும் நிர்மாணம் செய்தார். சுகமாக இங்கு ஸ்ரீயுகளம் வஸிக்கின்றது என்ற பாவனையிலேயே அவர் இதற்கு ‘ஸ்ரீஸுகநிவாஸ்’ என்று பெயர் வைத்தார். இங்கு போஜ பத்திரத்தில் எழுதிய ஸீதாதேவியின் படமும், அதை வைத்திருந்த தங்க பெட்டகமும் (பாபாவிற்கு ஸ்வப்னத்தில் தோன்றி மீர்புரிலிருந்து கண்டெடுக்கப்பட்டது) வைக்கப்பட்டது. ஸ்ரீஸ்வாமி கோகில்ஜியின் ஒரு விலக்ஷணமான சரண சின்னமும், இங்கு காணப்படுகிறது. ஒரு முறை தனது குருநாதரின் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தபொழுது அவருள் விரஹாக்னி கொழுந்துவிட்டு எரிய தொடங்கியது. அந்த விரஹாக்னியால் அவர் நின்றிருந்த சிமெண்ட் தரை மெழுகைப் போல் உருகிவிட்டது. இந்த சரண சின்னம் இன்றும் காணக்கிடைக்கிறது. ‘ஸுகநிவாஸ்’ ஸ்தாபிக்கப்பட்டதும், அது ஸிந்தி பக்தர்களுக்கு ஒரு ஸத்ஸங்க மையமாக ஆகிவிட்டது.

கோகில்ஜியின் ஆசைகளும், அவரின் வாழ்க்கை முறையும், ப்ருந்தாவனத்திலுள்ள மற்ற ஸாது மஹாத்மாக்களை காட்டிலும் வேறுபட்டிருந்தது. தன்னை யாரும் வணங்கக் கூடாது என்பதற்காகவே அவர் ஒரு க்ருஹஸ்த சேட் (வியாபாரி) போன்ற வேஷத்திலேயே காணப்படுவார். தனது பாதங்களை யாருமே ஸ்பரிசிக்க அவர் அனுமதிக்கமாட்டார். எப்பொழுதாவது அவருக்கு பரமார்த்திகமான (ஆன்மீகமான) நஷ்டமோ, உடல் நலக்கேடோ ஏற்பட்டால், அவர் “யாரோ எனக்கு வஞ்சனம் செய்திருக்கிறார்கள்’ என்பார். இதன் பொருள் யாரோ அவரை ஸேவித்திருக்கிறார்கள் என்று அவர் கூறுவதாகும்.



Please subscribe to Madhuramurali

கோகில்ஜி மிகவும் தயாளுவும், மற்றவர் குற்றங்களை பார்க்காதவரும் ஆவார். மற்றவர்களுடைய தோஷங்களையும் தன்மேலேயே ஆரோபித்துக் கொண்டு அவைகளை நிராகரணம் செய்துவிடுவார். ஒரு முறை அவர் அவத தேசத்திலிருந்து பர்ஸானா போகும் வழியில் கான்பூரில் தங்க நேரிட்டது. ஒரு மஹந்த்ஜி கோகில்ஜியிடம், "கான்பூரில் தாங்கள் தங்குவதற்கு இடம் எதுவும் இல்லை. நான் என்னுடைய ஒரு நண்பனுக்கு கடிதம் எழுதுகிறேன். நீங்கள் அவர் வீட்டிலேயே தங்கியிருக்கலாம்" என்று கூறினார். மஹந்தினுடைய கடிதத்தை எடுத்துக்கொண்டு கோகில்ஜியும் கான்பூர் சென்றார். ஒரு வேலையாளிடம் கடிதத்தை கொடுத்து, அந்த நபரின் வீட்டிற்கு அனுப்பினார். சிறிது தொலைவில் தன் ஸாமான்களுடன் அமர்ந்திருந்தார். அந்த நபரோ கடிதத்தைப் பார்த்து, "என்னால் ஒன்றும் செய்ய இயலாது" என்று கூறிவிட்டார். ஸ்வாமிஜியை சந்திக்கவும் வரவில்லை. அந்த வேலையாளிற்கு மிகுந்த வேதனையாக இருந்தது. அவனை ஸமாதானப்படுத்தியவாறே ஸ்வாமிஜி "நகரங்களில் எப்பொழுதுமே இடப்பற்றாக்குறை இருக்கத்தான் செய்யும். அவர்கள் வீட்டில் இன்று என்ன நிர்பந்தமோ! குற்றம் நமதே அன்றி அவர்களிடம் இல்லை. நம்மால் இன்று அவருக்கு கோபம் உண்டாகிவிட்டது. நீ சற்று சென்று, அவர்கள் வீட்டிலிருந்து ஒரு சொம்பு ஜலம் வாங்கி வா" என்று கூறி அனுப்பினார். வந்த அதிதியை விருந்தோம்பல் செய்யாத பாபத்திலிருந்து அந்த நபரை காக்க, அந்த ஸேவகன் கொண்டு வந்த ஜலத்தை பருகிவிட்டுச் சென்றார்.

கோகில்ஜிக்கு ஸத்ஸங்கம் என்றால் மிகவும் பிடிக்கும். ப்ருந்தாவனத்தில் வஸித்து வந்த அனைத்து ஸாது மஹாத்மாக்களையும் அவர் சென்று தரிசிப்பத்தோடு மட்டுமில்லாமல், அவர்களிடமிருந்து தனது ஸ்வாமினியான ஜனகநந்தினிக்கும் ஆசிகளை பெற்று வருவார். தானும் எப்பொழுதும், அவளுக்கு ஆசிகள் வழங்கிக் கொண்டே இருப்பார்.

(தொடரும்)



Please subscribe to Madhuramurali

# மாலே மணிவண்ணா – 128




–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

ஆறாம் பாடலின் பெயர்ப்பை இனி காண்போம். அறிவெல்லையால் அறியப்படாத புகழோடு விளங்கி மண்ணை தாங்கும், சக்கரவாளம் முதலாக பழம்பெரும் புலவர்களால் ஆராய்ந்து சொல்ல பெற்ற மலைகளை பொதுவகையால் சொன்னால் பலவாகும்; அப்பலவற்றுள்ளும் நிலத்தில் உள்ள உயிர்களின் பசித்துன்பத்தை நீக்கி மற்ற பயன்களையும் எப்பொழுதும் உயிர்கள் பெற பயன்படும் மலைகள் சிலவாகும். அந்த சில மலைகளுள்ளும் தெய்வங்கள் தாமாக விரும்பும் மலர்களை உடைய தடாகங்களும், மேகம் படியும் உயர்ந்த மலை சிகரங்களையும் உடைய குலவரைகள் மிக சிறந்தன. அவற்றுள்ளே கடலும் கானலும் போல வேறு வேறாகிய நிறத்தினையும், சொல்லும் பொருளும் போல வேறுபடாத தொழிலினையும், உடைய மாயோனும் பலராமனும் எழுந்தருளியிருக்கும், சோலைமலை சிறந்தது.

துளசிமாலையை அணிந்த திருமால் அருள்செய்தால் அல்லால் துறக்கம் அடைதல் எளிதாகுமா? கடிய முயற்சிகளால், பெறக்கூடிய வீடு பேற்றை, எளிதில் நாம் அடைய செய்வதனால் திருமாலிருஞ்சோலைமலையை தோத்தரிக்க கடவோம்.

பலராமனது திருமார்பில் உள்ள வெண்கடம்ப மாலையை போல், அருவி வீழ்வதனால் சிலம்பாறு அழகு பெறும். திருமாலிருஞ்சோலை என்னும் பெயர் உலகம் எல்லாம் பரவ மகளிரும் மைந்தருமே காமத்தை விதைத்து விளைக்கும் நள்ளிரவின் இயல்பை உடைய இம்மலையில், இளவெயில் சூழ இருள் வளர்தலை போல பீதாம்பரத்தை அணிந்த திருமால் பலதேவரோடு அமர்ந்து நிற்கும் நிலையை மக்களே! தியானம் செய்யுங்கள். அம்மலையின் சிறப்பை கேளுங்கள்.

சுனைகளில் எல்லாம் நீலமலர் மலர, அச்சுனையை சூழ அசோக மரங்கள் மலர்தலாலும், வேங்கை மரங்கள்



Please subscribe to Madhuramurali

மலர்தலாலும் மாயோனை போலுள்ளது அம்மலை. இருங்குன்று என்னும் பெயர் பரவி உலகத்தில் பழையதாகிய புகழை உடைய இம்மலை, தன்னை கண்டவர்கள் மயக்கத்தை அறுக்கும் தெய்வம். அதனால் அம்மலைக்கு சென்று திருமாலை தொழ முடியாதவர்கள், மலையை கண்டு வணங்குங்கள்.

குட்டியால் தழுவப்பெற்ற மந்தி பாயவும், முல்லை மலர் கற்பு நெறியை காட்டி நிற்கவும், மயில்கள் அகலவும் குருக்கத்தியின் இலை உதிரவும், அங்கே இருந்து குயில் கூவவும் அம்மலையின் குகைக்குள் முழங்குகின்ற எதிரொலி ஒழியாது. நும் மனைவிமாரோடும், உம்மை பெற்ற தாய் தந்தையரோடும், குழந்தைகளோடும், சுற்றத்தாரோடும், கூடி சென்று, அக்குன்றத்தை தெய்வமாக மதித்து, திசை நோக்கி தொழுது செல்மின். தன் திருவுந்தியில் தோன்றிய தாமரையை ஒத்த கண்ணை உடையவனும், மேகம், இருள், நீலமணி ஒத்த திருமேனியனும், எல்லா உலகத்தினும் வெளிப்பட்டு, அவ்விடத்து உயிர்க்கூட்டங்களின் பிறவித்துன்பத்தை போக்குபவனும் ஆகிய திருமால், அன்பு கொண்டு, அம்மலையில் எழுந்தருளி இருக்கின்றான்.

திருமாலே! நீ துளசி மாலையை உடையாய். நீலமலை போன்றாய். மிக்க ஒளி உடையாய். ஒற்றை குழை உடையாய். கருட கொடி உடையாய். வளைந்த கலப்பையை உடையாய். தண்டு சக்கரம், வில், அம்பு, பாராவளை, வாள் என்பவற்றை ஏந்தியுள்ளாய். என்று வேதம் உன் பெருமையை உரைத்தலால், நாங்களும் அவற்றுள் அறிந்தவற்றை கூட்டி உரைத்தோம்.

பெரும்புகழை உடைய திருமால், பலதேவர் என்னும் இருவரையும் தொழுது வேண்டுகின்றோம். எமது வேண்டுகோள், இந்த திருமாலிருஞ்சோலைமலையின் அடியின் கண் வசித்தல், எமக்கு எப்பொழுதும் உண்டாக வேண்டும் என்பதே ஆகும். (தொடரும்)

மதுரை நாமத்வாரில், எப்பொழுதும் மஹாமந்திர கீர்த்தனம் செய்து வந்த, திரு.கே.ஜி.பாலகிருஷ்ணன், ஏப்ரல் 29ஆம் தேதி, பகவானின் திருவடிகளை அடைந்தார் என்பதை மதுரமுரளி பிரார்த்தனைகளுடன் தெரிவித்து கொள்கிறது.



Please subscribe to Madhuramurali

# அப்பாலுக்கு அப்பால்



## அக்கா மஹாதேவி -6

தன் முன் நின்ற மஹாதேவியை பார்த்த அல்லமருக்கு "நாம் பிறருக்கு எந்த நிலையை அடைய உபதேசம் செய்து வருகிறோமோ, அதை அடைந்த ஒருவர்" வந்து நிற்பது போல் தோன்றியது. அவருக்கே கொஞ்சம் பிரமிப்பாய் இருந்தது. இருப்பினும் வெளியில் காட்டி கொள்ளவில்லை.

அனுபவ மண்டபத்தின் உள்ளே நுழைந்த மஹாதேவியை பார்த்து அல்லமபிரபு, "பெண்ணே நீ யார்? உனது கணவனின் பெயர் என்ன? உன் அழகை பற்றி உனக்கு கர்வம் இருப்பது போல் தெரிகிறது. உனது கணவனை பற்றிய விவரத்தை சொல்வாயானால் மேற்கொண்டு பேசலாம். இல்லை எனில் உனக்கு இங்கு சரணர்கள் இடம் தர மாட்டார்கள்" என்றார். குரலில் கொஞ்சம் கடுமை இருந்தது. ஆனால் புரிந்து கொள்ள முடியாத ஆழம் இருந்தது.

மஹாதேவி அமைதியாக "பரமனை மணக்க நான் ஆசைப்பட்டது உங்களுக்கு தெரியும். அதற்காக பல பிறவிகளில் நான் கடுந்தவம் செய்தேன் என்பதும் நீர் அறிந்ததே. அதன்படியே பரமனை மணந்தும் கொண்டேன். எனது மனம் முழுவதும் மல்லிகார்ஜுனர் நிறைந்து போனார். அதனால் எனக்கு ஆசைகளே எழாது போனதால் ஆசைகளை கட்டுப்படுத்த வேண்டிய நியமம் தேவை இல்லாததாயிற்று" என பதில் சொன்னார். இருவரும் பேச்சை தொடர்ந்தனர்.

"நீ அணிந்திருக்கும் ஆடை குறையானது. சரணர்களால் அங்கீகரிக்கப்பட முடியாதது"

"எனக்கதன் அவசியம் இல்லை. பிறருக்காகவே இது!"

"ஆடை தேவை இல்லை எனில் அங்கங்களை ஏன் மறைக்கிறாய்? மறைந்திருக்கும் வெட்கமோ?"

"இருதயம் சுத்தமாக இருந்தால், வளர்வதும் தேய்வதுமான உடம்பு வெளுத்தாலென்ன கறுத்தாலென்ன? நான் மல்லிகார்ஜுனரின் நிழலில் இருக்கிறேன். எனை சோதிக்க அவசியம் என்ன (உமக்கு அது தெரியுமே!). முன் சொன்னது போல் ஆடை பிறருக்காகவே அன்றி எனக்கல்ல!



Please subscribe to Madhuramurali

அல்லமர் கண் உடனே பொம்மையயாவை சரேலென பார்த்து திரும்பியது. சரணர்கள் கண் தாழ்ந்திருந்தது. பிரபு விடவில்லை "நீ சொல்வதை யாரால் நம்ப முடியும். நீ சொல்லும் தெய்வத்துக்கு உருவம் இல்லை. உனக்கோ உருவம் இருக்கிறது. உருவம் கொண்ட ஒருவர் உருவமில்லாதவரை மணத்தல் ஆகுமோ?"

"அய்யா! கட்டியான நெய்யிற்கும் உருகி இருக்கும் நெய்யிற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? அவனல்லவா உலகமாக ஆகி இருக்கிறான். உருவமற்றவனன்றோ உருவங்கள் தாங்கி நிற்கிறான். (எல்லாம் அறிந்த என்பது தொனிக்க) நீங்கள் என்னை கேள்வி கேட்கிறீர்களே?".

நவீன விஞ்ஞானிகள் பருப்பொருளானது தன்னுள் ஆற்றலை அடக்கி உள்ளது என்றும், ஆற்றலானது பருப்பொருளின் நுண்ணுருவம் என்றல்லவா சொல்கின்றனர்!

"சரி! உன்னை யார் மல்லிகார்ஜுனருக்கு மணம் செய்து வைத்தார். அப்படி ஒருவர் உண்டா?"

"ஆம் பிரபு! என்னை என் மணாளனுக்கு என் குருவே மணம் செய்து வைத்தார். இது அவரருள்!"

பிரபு அப்பொழுது அந்த மண்டபத்தை சுற்றிலும் பார்த்தார். அவருக்கு என்னவோ சரணர்கள் மஹாதேவியை முழுதும் புரிந்து கொள்ளவில்லை என தோன்றியது. கேள்விகளை தொடர்ந்தார்.

"சரி. உனது ஆசைகள் அடங்கி விட்டன என்று சொல்கிறாயே? இந்திரியங்களை எப்படி அடக்கினாய்?"

பிரபு! பாம்பின் பல்லை பிடுங்கி விட்டால் அதனிடம் பயப்பட என்ன இருக்கிறது? உடம்பும் ஆன்மாவும் எப்படி பின்னி இருக்கிறது என்பதை உள்ளபடி அறிந்து விட்டால் உடம்பினால் ஏற்படும் பந்தம் எவ்விதத்தில் ஒருவரை பாதிக்கும்? மேலும், பரமனை அறிந்தோர் உடல் சம்பந்தம் பெற்றிடினும், உடலிருப்பதை அறிந்தவாறேவா சஞ்சரிக்கின்றனர்?

"சாதுரியமாக பேசுவதை சரணர்கள் ஏற்க மாட்டார்கள். உண்மையை சொல். நீ உன் கணவன் கௌசிகனை துறந்து வந்தவளாயிற்றே? ஏன் பொய் சொல்கிறாய்" என்று கேட்டார் அல்லமர். அது மஹாதேவியை முள்ளென தைத்தது.

(தொடரும்)



Please subscribe to Madhuramurali

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120
For Details: **+91-44-24895875**

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:

Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 .

**D.D. in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** / நேரில் ரொக்கம் / மணியார்டர் **(D.D /M.O/Cash)** மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒரு வருட சந்தா மட்டுமே பெற்று கொள்ளப்படுகிறது.
கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


| ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் தரிசனம் | |
|---|---|
| ஏகாதசி | ஜூன் 9, 23 ஜூலை 8, 22 |

**Announcement**

**To know about Sri Swamiji's Darshan Timings, Events & also to Register your Prayers, Please call +91-9382393833**

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.




Please subscribe to Madhuramurali